செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-53 மே, 2025



தோழர்கள் அனைவருக்கும் மே தின புரட்சிகர வாழ்த்துக்கள்



நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் 20-05-2025-அனைத்து தொழிற்சங்க அறைகூவல்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பங்கேற்பு

மத்திய தொழிற்சங்கங்களான **INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC** கலந்துகொண்ட தொழிலாளர்களின் தேசிய மாநாடு மார்ச் **18, 2025** அன்று புதுடில்லியில் நடைபெற்றது.



இந்த மாநாட்டில் மத்திய தொழிற்சங்கங்களும் பல்வேறு துறை சார்ந்த தொழிற்சங்க அமைப்புகளும் கலந்து கொண்டன. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும் இந்த மாநாட்டில் பங்கேற்றது.

ஒன்றிய அரசு பின்பற்றும் தொழிலாளர் விரோதக் கொள்கைகள் மற்றும் மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக தொழிலாளி வர்க்கத்தின் மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்களை மாநாடு விவாதித்தது.

ஒன்றிய அரசின் இத்தகைய கொள்கைகளை எதிர்த்தும், கைவிடக்கோரியும் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து இம்மாதம் மே **20, 2025** அன்று ஒரு நாள் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் போதுமான பணி நியமனம், பொதுத்துறையை வலுப்படுத்துதல், பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவதை கைவிடுதல், தேசிய ஓய்வூதிய திட்டத்தை **(NPS)** ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துதல், புதிய தொழிலாளர் சட்டங்கள் **(LABOUR CODES)** என்ற பெயரில் தொழிலாளர் சட்டங்களில் பெருநிறுவனங்களுக்கு ஆதரவான மாற்றங்களை கண்டித்தும், இத்தகைய கொள்கைகளை விலக்கிக் கொள்ள வலியுறுத்தியும் அனைத்து தொழிற்சங்கங்களும் போராடி வருகின்றன.

அனைத்து தொழிற்சங்க இயக்கத்தின் ஒருங்கிணைந்த அங்கமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் இருப்பதாலும், தொழிலாளர் வர்க்கத்தின் மீதான அதிகரித்து வரும் தாக்குதல்களுக்கு எதிரான பொதுவான, ஒன்றுபட்ட போராட்டத்தில் பங்கு கொள்வதன் அவசியம் கருதியும், மே 20, 2025 அன்று கோடிக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்கும் பிரம்மாண்டமான நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் பங்கேற்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்(AIBEA) மற்றும் அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம் (AICBEF) முடிவு செய்துள்ளது.

போராட்ட நடவடிக்கைகளை நிதித்துறையில் முழுமையாக அனுசரிக்க நிதித்துறை சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டம்:

ஒன்றிய அரசின் தொடர்ச்சியான தொழிலாளர் விரோதக் கொள்கைகள் மற்றும் மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக மே 20, 2025 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்திற்கு தேசிய தொழிலாளர் மாநாடு விடுத்த அழைப்பைக் கருத்தில் கொண்டு, இப்போராட்டங்களை நிதித் துறையில் செயல்படும் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்படுத்துவது குறித்து முடிவெடுக்கும் நோக்கத்தில் 24-04-2025 அன்று வங்கி மற்றும் காப்பீட்டுத் துறையில் உள்ள பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் AIBEA, NCBE, AIBOA, BEFI, INBOC, AIIEA, AILICEF, AINLIEF(INTUC) ஆகிய சங்கங்களின் பொதுச் செயலாளர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர் வர்க்கம் மற்றும் பொதுமக்களின் நலனுக்கு விரோதமான ஒன்றிய அரசின் கொள்கைகளை தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும் என்ற மத்திய தொழிற்சங்கங்களின் போராட்டத் திட்டங்களையும், தேசிய தொழிலாளர் மாநாட்டின் முடிவுகளையும் வரவேற்றன.

AIBEA, AIIEA, AILICEF, AIBOA, BEFI மற்றும் AINLIEF ஆகிய சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்த நிலையில், ஏனைய தொழிற்சங்கங்கள் நிர்வாகக் குழுக்களில் விவாதித்து, ஒன்றிணைந்த வேலை நிறுத்தம் மற்றும் போராட்டத் திட்டங்களில் பங்கேற்கும் முடிவெடுப்பதாக அறிவித்துள்ளன.

கூட்டத்தில் பின்வரும் பிரச்சாரத் திட்டங்களை நிதித்துறையிலுள்ள தொழிற்சங்கங்கள் கூட்டாக மேற்கொள்ளவது என்று முடிவு செய்யப்பட்டது:

- 20-5-2025 அன்று நடைபெறும் பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்க நிதித் துறையில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் கூட்டாக வேண்டுகோள் விடுப்பது.
- வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பான பிரகடனம் குறித்த துண்டுப்பிரசுரம் வெளியிடுவது.
- மே 1 முதல் மே 18, 2025 வரை பல மையங்களில் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவது.
- மே 8 மற்றும் 19, 2025 அன்று ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது.

மே 20, 2025 வேலைநிறுத்த நாளன்று அனைத்து மையங்களிலும் அனைத்து சங்கங்களும் இணைந்து பேரணிகள்/ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது.

இந்தப் புதிய முயற்சி, பொதுத்துறையில் தனியார்மயமாக்கல் மற்றும் அரசின் முதலீடுகளை விலக்குவதற்கான ஒன்றிய அரசின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடவும், தொழிலாளர்கள் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளவும் நிதித்துறையில் ஒன்றிணைந்த போராட்ட திட்டங்களை மேற்கொள்வதற்கான வழிவகுத்துள்ளது.

மே 20, 2025 நடைபெறும் நாடு தழுவிய வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் மற்றும் அதன் தொடர்பான போராட்ட நடவடிக்கைகளில் சம்மேளனத்தின் இணைப்பு சங்கங்களும், நமது உறுப்பினர்களும் முழு அளவில் பங்கேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தை பெரும் வெற்றி பெறச் செய்யுமாறு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வேண்டுகின்றது.

மே 20, 2025 வேலைநிறுத்த நாள் மற்றும் அதற்கு முந்தைய தினத்தில் மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் குறித்த செய்தி மற்றும் புகைப்படங்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்திற்கு அனுப்பிட வேண்டுகிறோம்.

தோழர் பர்வானா அவர்களின் ஐம்பதாம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் H L பர்வானா அவர்களின் ஐம்பதாவது ஆண்டு நினைவு நாள் கடந்த 18-04-2025 அன்று தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தினால் நினைவு கூறப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



அன்றைய தினம் சென்னையில் அமைந்துள்ள பால மந்திர் ஆதரவற்ற சிறுவர் இல்லத்திற்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சார்பாக WASHING MACHINE ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் மற்றும் சம்மேளனத்தின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஸ்தாபன தின நிகழ்ச்சிகள் மாநிலமெங்கும் நம் உறுப்பினர்கள் உற்சாகத்துடன் பங்கேற்பு

கடந்த **20-04-2025** அன்று, நம் தாய்ச் சங்கமான அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஆண்டு ஸ்தாபன தினம் நம் மாநிலம் முழுவதிலுமுள்ள நம் இணைப்பு சங்கங்களாலும், உறுப்பினர்களாலும் மிகுந்த உற்சாகத்துடன் அனுசரிக்கப்பட்டது.

சென்னையில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளன வளாகத்தில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செங்கொடியினை ஏற்றி வைத்து சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் ஸ்தாபன தின உரையாற்றினார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கடந்த எண்பதாண்டு காலத்தில் கடந்து வந்த போராட்டப் பாதை, வங்கி ஊழியர் வாழ்க்கைத்தரம் மேம்பட வென்றெடுத்த சாதனைகள் குறித்து விரிவாகப் பேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள், நமது சங்கத்தினை மென்மேலும் வலிமையாக்கிட வேண்டும் என்பதை ஸ்தாபன தின சூளுரையாக உறுப்பினர்கள் மனதிற்கொண்டு, சங்கத்தின் நடவடிக்கைகளில் மேலும் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பொதுத்துறை வங்கிகளை தனியார்மயப் படுத்தும் ஒன்றிய அரசின் முயற்சிகளை கண்டித்த தோழர் **E** அருணாசலம் அவர்கள், பொதுத்துறை வங்கிகளை பேணிக்காக்கவும், தொழிலாளர் விரோத சட்டத்திருத்தங்களை எதிர்த்தும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் போராட்ட நடவடிக்கைகளை வெற்றிபெறச் செய்வது ஒவ்வொரு உறுப்பினரின் தலையாய கடமை என்பதை வலியுறுத்தினார்.

ஏராளமான தோழர்கள் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் மூத்த தோழர் **K** விஜயன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொருளாளர் தோழர் **K** ஸ்ரீகிருஷ்ணா, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **S D** சீனிவாசன் ஆகியோர் வாழ்த்தி உரையாற்றினர்.



நம் தாய்ச் சங்கமான அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்தாவது ஸ்தாபன தினத்தினை அனுசரிக்கும் வகையில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொடியேற்றுதல் நிகழ்வில் கலந்துகொண்ட தோழர்களுக்கு சம்மேளனம் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஸ்தாபன தினத்தினைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பாக, 19-04-2025 மாலை சென்னை பாரிமுனையிலுள்ள தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் முன்பு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் அவர்கள் சங்கத்தின் கொடியினை ஏற்றி வைத்து ஸ்தாபன தின உரை நிகழ்த்தினார்.



அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் G வைரப்பன் அவர்கள் உறுப்பினர்களுக்கு ஸ்தாபன தின வாழ்த்து தெரிவித்து உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் சென்னையில் பணிபுரியும் ஏராளமான கூட்டுறவு வங்கி ஊழியர்களும்,சம்மேளனத்தின் பொறுப்பாளர்களும், இணைப்பு சங்கங்களைச் சார்ந்த தலைவர்களும் கலந்துகொண்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் நிறுவன நாளை முன்னிட்டு திருச்சி மாவட்ட வங்கி ஊழியர் சங்க அலுவலகத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கொடி ஏற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு ஸ்தாபன தின வாழ்த்து தெரிவித்து மாவட்ட சங்க நிர்வாகிகள் உரையாற்றினர்.



ஏராளமான தோழர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில், மறைந்த நம் சங்கத் தலைவர்களின் படங்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டபின், உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர்கள் தங்களது தொழிற்சங்க அனுபவங்களையும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்க நடவடிக்கைகளால் தாங்கள் எவ்வாறு ஈர்க்கப்பட்டோம் என்பது குறித்தும் தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர்.

அன்றைய தினம் மதியம், மாவட்ட சங்க நிர்வாகிகள் அனைவரும் திருச்சியில் அமைந்துள்ள கங்காரு கருணை இல்லம் என்ற மாற்றுத் திறனாளிகள் இல்லத்திற்கு சென்று அங்கு தங்கியுள்ள அனைவருக்கும் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் மதிய உணவு வழங்கினர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது நிறுவன நாளை முன்னிட்டு தஞ்சை மாவட்ட மாவட்ட வங்கி ஊழியர் சங்க அலுவலகத்தில் மறைந்த நம் சங்கத் தலைவர்களின் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டபின், உறுப்பினர்கள் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் **AITUC** தஞ்சை மாவட்ட தலைவர் தோழர் **C** சந்திரகுமார் கலந்துகொண்டு ஸ்தாபன தின வாழ்த்துரை நிகழ்த்தினார்.



நெல்லை தூத்துக்குடி மாவட்ட மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் நடைபெற்ற ஸ்தாபன தின நிகழ்ச்சியில், **AITUC** மாவட்ட தலைவர் தோழர் **R** ரெங்கன் அவர்கள் கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சி நகர வங்கி ஊழியர் சங்கம் சார்பில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஸ்தாபன தினத்தினை குறிக்கும் வகையில் இரத்த தான முகாம் நடைபெற்றது. நம் சங்கத்தினைச் சார்ந்த தோழர்கள் பலரும், சமூக ஆர்வலர்களும் இம்முகாமில் கலந்துகொண்டு இரத்த தானம் அளித்தனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஸ்தாபன தினத்தினை குறிக்கும் வகையில் மதுரை இராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் சிறப்புக் கூட்டம் மற்றும் சமூக நலத் திட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



மதுரையை அடுத்த மானகிரியில் அமைந்துள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் இருபத்தைந்து மேசை மற்றும் நாற்காலிகள் மதுரை ராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

28-04-2025 அன்று இப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் கலந்துகொண்டு அரசு ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளிடம் சங்கத்தின் நன்கொடையான மேசை மற்றும் நாற்காலிகளை வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன், மதுரை இராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பல்வேறு மாவட்டங்களிலும் நகரங்களிலும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஆண்டு நிறுவன தினத்தினக் குறிக்கும் வகையில் கூட்டங்களும், சமூக நன்கொடை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட நம் தோழர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டி வாழ்த்துகின்றது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநில மாநாடு ஆயத்த நடவடிக்கைகள் குறித்த கூட்டம்

சென்னையில் 2025, ஜூன் மாதம் நடைபெறவுள்ள தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மாநில மாநாட்டுப் பணிகள் குறித்து விவாதிப்பதற்கு சம்மேளனத்தின் நிர்வாகிகள் மற்றும் வங்கிவாரி இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்களின் கூட்டம் கடந்த 2025, ஏப்ரல் 8 மற்றும் 21 அன்று, சென்னையில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம், மற்றும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாச்சலம் மற்றும் சம்மேளனத்தின் நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



2025, ஜூன் மாதம் 22 மற்றும் 23 ஆம் தேதிகளில் சென்னை அரும்பாக்கத்தில் அமைந்துள்ள ஐஸ்வர்யா மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநில மாநாட்டினை வெற்றிகரமாக நடத்திடும் நோக்கில், அது தொடர்பான பணிகளை திறம்பட மேற்கொள்வது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24வது மாநில மாநாட்டினை, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் ராஜன்நாகர் அவர்கள் துவக்கி வைக்கின்றார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் B S ராம்பாபு, தமிழ்நாடு AITUC மாநில பொதுச் செயலாளர் தோழர் M இராதாகிருஷ்ணன் மற்றும் கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய அண்டை மாநில சம்மேளனங்களின் முக்கியத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்திட இசைந்துள்ளனர்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஒப்பற்ற முன்னோடித் தலைவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டினைக் குறிக்கும் வகையில், மாநாட்டு அரங்கத்திற்கு தோழர் N சம்பத் அவர்கள் பெயரும், கூட்ட அரங்கிற்கு தோழர் M S தாவூத் அவர்கள் பெயரும் சூட்டப்பட உள்ளது.

சம்மேளனத்தின் மாநாட்டுப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் அவற்றின் பொறுப்பாளர்களாக சம்மேளனத்தின் இணைப்பு வங்கிச் சங்கங்களைச் சேர்ந்த கீழ்க்கண்ட தோழர்கள் நியமிக்கப்பட்டனர்:

CATERING	தோழர் K ஸ்ரீகிருஷ்ணா தோழர் R கார்த்திக்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கனரா வங்கி ஊழியர் சங்கம்.
SECRETARIAT	தோழர் S D ஸ்ரீநிவாசன் தோழர் K கௌதம்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கனரா வங்கி ஊழியர் சங்கம்.
PR & PUBLICITY	தோழர் L சங்கர வடிவேலு	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
ACCOMMODATION	தோழர் D B கோபிநாத்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
SOCIAL MEDIA	தோழர் S ராதாகிருஷ்ணன்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
TRANSPORTATION	தோழர் L முரளி	யூகோ வங்கி ஊழியர் சங்கம்
DIAS MANAGEMENT	தோழர் J விஜயலட்சுமி	TNBEF மகளிர் அணி அமைப்பாளர்
HALL MANAGEMENT	தோழர் P C ஸ்ரீதர்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
DECORATION	தோழர் M தர்மராஜன்	கனரா வங்கி வொர்க்மென் ஊழியர் சங்கம்
MOBILISATION	தோழர் H டென்சிங்	இந்தியன் வங்கி ஊழியர் சங்கம்
VOLUNTEERS	தோழர் K P சாய்குமார்	பரோடா வங்கி ஊழியர் சங்கம்
FUNDS MANAGEMENT	தோழர் A சிதம்பரம்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
BYE-LAW AMENDMENTS COMMITTEE	தோழர் C H வெங்கடாசலம் தோழர் E அருணாசலம் தோழர் S D ஸ்ரீநிவாசன் தோழர் A சிதம்பரம் தோழர் V இரகுராமன்	தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மாநாட்டினை சிறப்பான வகையில் வெற்றிகரமாக நடத்தும் நோக்கில் மேற்குறிப்பிட்ட மாநாட்டுப் பணிக் குழுக்கள் அவ்வப்போது கூடி விவாதிக்கவும், மாநாட்டுப் பணி தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

வங்கி நிர்வாகங்கள் மற்றும் UFBU இடையே மத்திய தலைமை தொழிலாளர் ஆணையரால் ஏற்பாடு செய்யப்பட்ட சமரசக் கூட்டம் – 29-04-2025

மத்திய தலைமை தொழிலாளர் ஆணையர் (CLC) 21-3-2025 அன்று நடத்திய சமரசக் கூட்டத்திற்குப் பிறகு, UFBU அறிவித்திருந்த வேலைநிறுத்தத்தை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, CLC(C) அறிவுரைக்கிணங்க 23-4-2025 அன்று மும்பையில் உள்ள IBA அலுவலகத்தில் UFBU மற்றும் IBA நிர்வாகிகளுக்கிடையே விரிவான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

வாரத்திற்கு ஐந்து நாள் வங்கிச் சேவை, காலியிடங்களில் போதுமான நிரந்தர ஊழியர்களை நியமிப்பது, உயர்நிலை அதிகாரிகளுக்கான நியாயமற்ற பாரபட்சமான PLI வழங்குவதை மறுபரிசீலனை செய்வது, கிளைகளில் ஊழியர்கள் தாக்குதல்களுக்கு ஆளாவது மற்றும் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ள பிற பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 29-04-2025 அன்று புது டில்லியில் தலைமை தொழிலாளர் ஆணையர், வங்கி நிர்வாகங்கள், நிதித்துறை உயர்நிலை அதிகாரிகள் மற்றும் UFBU சங்கத்தின் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட மற்றுமொரு சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்றது.



இப்பேச்சுவார்த்தையில், உயர்நிலை வங்கி அதிகாரிகளுக்கான பாரபட்சமான PLI வழங்குவதை உடனடியாக மறுபரிசீலனை செய்யுமாறு DFS அதிகாரிகளிடம் CLC(C) வலியுறுத்தினார். மேலும், வங்கிக் கிளைகளில் தேவைப்படும் எழுத்தர்கள் மற்றும் இதுகாறும் புதிதாக பணியில் அமர்த்தப்பட்டவர்கள் குறித்த தகவல்களை அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் வங்கி நிர்வாகங்கள் தெரிவிக்கவேண்டும் என்று CLC(C) உத்தரவிட்டார்.

வாரத்தில் ஐந்துநாட்கள் வேலைத் திட்டம் நிதி அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளதாக DFS அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து, CLC(C) இக்கோரிக்கை மீது தாமதமின்றி முடிவெடுக்க, தாமே நேரிடையாக DFS செயலாளருக்கு கடிதம் எழுதுவதாக கூறினார். அடுத்த சமரசப் பேச்சுவார்த்தை புது டில்லியில் மத்திய தலைமை தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் 2025, ஜூன் 17ம் நாளன்று நடத்திட முடிவு செய்யப்பட்டது.

தொழிலாளர்களின் வாழ்வு முதலாளித்துவ சக்திகளால் சுரண்டப்படுவதை அனுமதியோம்


ஒற்றுமை மற்றும் போராட்டமே தொழிலாளர்களின் ஆயுதம் - WFTU மே தின வாழ்த்து

மே மாதம் முதல் நாள், உழைப்பாளர் தினம் - நாள்தோறும் எட்டு மணி நேரம் மட்டுமே உழைக்கும் நேரமாக உலகம் தீர்மானிக்க வேண்டும் என்பதை போராடிப் பெற்ற வரலாற்று தினம். முதலாளிகள் மற்றும் அதிகார சக்திகளை எதிர்த்து நடைபெற்ற வீரம் செறிந்த தொழிலாளர் புரட்சிகளில் இரத்தம் சிந்தி உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நாள் மே நாள் ஆகும்.



உழைப்புச் சுரண்டலை தடுக்கவும், புதிய உரிமைகளுக்கான குரலை வலுப்படுத்தவும், உறுதி ஏற்கும் தினம் இந்த மேதினம் ஆகும். **1886** ஆம் ஆண்டு சிகாகோவில் நடந்த தொழிலாளர் போராட்டத்தின் **139** வது ஆண்டு நிறைவை சர்வதேச வர்க்க சார்புடைய தொழிற்சங்க இயக்கம், தொழிலாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள போர்க்குணமிக்க தொழிற்சங்கங்கள் போராட்டங்களுடன் இவ்வருடம் மே தினத்தினை கொண்டாடுகின்றன.

கடந்து சென்ற காலத்தில் தொழிலாளர்கள் அனுபவித்த துன்பங்களையும் தியாகங்களையும் நினைவு கூர்வதற்கும், தொழிலாளர்கள் சுரண்டப்படுவதற்கு எதிரான போராட்டத்தைத் தொடர்வதற்கும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் உறுதியை புதுப்பிக்கும் சர்வதேச ஒற்றுமை தினமாக உலகத் தொழிலாளர்களால் மே தினம் கொண்டாடப்படுகிறது.



இந்த ஆண்டு மே தினம், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், சமூக நீதியை சிதைக்கும் முயற்சிகள், போர்கள் மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு எதிராகவும் உலகெங்கிலும் இடைவிடாத போராட்டத்தை **WFTU** முன்னெடுக்கும் நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் **80**வது ஆண்டு நிறைவு மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு எண்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் இவ்வாண்டு மே தினம் அனுசரிக்கப்படுகின்றது.

தொழிலாளர் உரிமைகள் மீது அதிகரித்து வரும் தாக்குதல்கள்:

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தொழிலாளி வர்க்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் மீதும், பணி நிரந்தரம், வேலைப் பாதுகாப்பு, கண்ணியமான ஊதியத்திற்கான உத்திரவாதம், மேம்பட்ட வாழ்க்கைத் தரத்திற்கான உரிமை, கூட்டுபேர உரிமைகள் ஆகியவற்றின் மீதும் தாக்குதல்கள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன.

பலகோடி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்த சிறு, குறு நிறுவனங்கள் பல்லாண்டுகளாக தொடர்ந்து சிதைக்கப்பட்டு, காணாமல் போய்விட்ட காரணத்தினால் நாடெங்கிலும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தினை இழந்து விட்டனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நமது நாட்டில் வேலையின்மை அதிகரித்துள்ளது. உலகிலேயே கடும் பட்டினி நிலவும் பதினைந்து நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளதாக உலகப் பட்டினிக் குறியீடு ஆய்வு கூறுகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியிலிருந்துவரும் ஒன்றிய பாஜக அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக, இந்திய நாட்டின் கடன்சுமை பல இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால் இவ்வளவு கடும் நெருக்கடிக்கு நாடும், மக்களும் ஆட்பட்டுள்ள நேரத்திலும்கூட அம்பானி, அதானி போன்ற இந்தியப் பெருமுதலாளிகளின் சொத்து வருமானம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.



செல்வத்தை உற்பத்தி செய்யும் மூலதனத்தை ஒன்றிய அரசு கார்பொரேட் முதலாளிகளுக்கு இலவசமாக அளிக்கின்றது. பொதுத்துறைக்குச் சொந்தமான நெடுஞ்சாலைகள், மின் கோபுரங்கள், கம்பி வழித் தடங்கள், இயற்கை எரிவாயுக் குழாய்கள், கிடங்குகள், இரயில்கள், இரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள், துறைமுகங்கள் ஆகியவை தனியாரிடம் குத்தகை என்ற பெயரில் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றை தனியார்மயம் செய்யும் திட்டங்கள் ஒன்றிய அரசினால் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகள், இந்திய நாட்டின் சுயசார்பின்மை, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூக நீதிக்கு எதிரானதாகும்.

ஆனால் இத்தகைய வளங்களை உருவாக்குவதற்கு தங்கள் உழைப்பினை அளிக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தரும் பல்லாண்டு காலம் போராடிப் பெற்ற சலுகைகளும் சட்டங்களும் பறிக்கப்பட்டு, அவர்களின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுகின்றன. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, வேலைநிறுத்த உரிமைகள் மறுக்கப்படும் சட்டத் திருத்தங்கள் ஒன்றிய பாஜக அரசினால் எதேச்சாதிகார முறையில் திணிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பன்முனைத் தாக்குதல்கள் தொழிலாளர்களின் மீது தொடுக்கப்படும் வேளையில், மக்களை திசை திருப்ப, சாதி, மதம், மொழி ஆகியவற்றின் பெயரில் கலவரங்களை உருவாக்கி மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்திட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தியக் குடும்பங்களின் கடன்சுமை பெருமளவு அதிகரித்து சேமிப்பு வீழ்ந்துள்ளதால் மக்கள் வறுமையில் தள்ளப்படுகின்றனர். நாட்டினை ஆள்வோரின் இத்தகைய கார்பொரேட் ஆதரவுக் கொள்கைகளை எதிர்த்துப் போராட வேண்டிய முக்கியமான பொறுப்பு இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் முழுமுதற் கடமையாக உள்ளது.

ஜனநாயக சுதந்திரம் மற்றும் தொழிற்சங்க உரிமைகள், உலகம் முழுவதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. தொழிற்சங்க அமைப்பு, கூட்டு பேரம் மற்றும் வேலைநிறுத்தம் செய்வதற்கான புனித உரிமை ஆகியவை தாக்குதலுக்கு உள்ளாகின்றன. சமூகப் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரப் பாதுகாப்பு போன்ற முக்கிய சமூக தேவைகள் தனியார் மயம் ஆக்கப்பட்டு வருகின்றன. முதலாளித்துவ நெருக்கடியின் தீங்கினை உழைக்கும் மக்கள் மற்றும் பொதுமக்கள் தோள்களில் சுமத்திட முயற்சிக்கப்படுகிறது.



தொழிலாளி வர்க்கத்தின் ஆயுதம் ஒற்றுமையும், போராட்டமும் சர்வதேசியமுமே ஆகும். இந்த ஆயுதங்களைக் கொண்டு தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் ஒன்றிணைந்து, மக்கள் உரிமைகளை மீட்கும் போராட்டங்களை தொடரும் போதுதான், உழைப்புச் சுரண்டலை ஒழிக்கும் நெருப்பை என்றென்றும் அணையாமல் காத்திட முடியும்.

இப்போதைய தாராளமய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தை கட்டமைக்கும் நுணுக்கங்களைக் கற்றுத்தரும் மே தின வரலாற்றைப் பாதுகாத்து, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு போராட்டப் பாதையினை வழிகாட்டி வரலாறு படைத்திட இந்த மே தின நாளில் சபதமேற்போம்.

தொழிலாளர்களின் சமகாலத் தேவைகளை உறுதி செய்யவும், ஒடுக்குமுறை, பாகுபாடு, சுரண்டலுக்கு எதிராகவும், ஜனநாயக மற்றும் தொழிற்சங்க சுதந்திரத்தைக் காத்திடவும், ஏகாதிபத்திய போர்களுக்கும் தலையீடுகளுக்கும் எதிராகவும் தொழிலாளர்கள் மேலும் ஒன்றுபட்டு மேம்பட்ட போர்க்குணத்துடன் போராட, இந்த மே தினத்தில் உறுதி ஏற்க உலகத் தொழிற்சங்க சம்மேளனம் அறைகூவல் விடுக்கின்றது.

பொருளாதாரத் தாக்குதல்களை வர்க்கப் போராட்டங்களால் முறியடிப்போம்:

உலகம் முழுவதும் **105** மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க சர்வதேச தொழிற்சங்க அமைப்பான உலக தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (**WFTU**), சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு போர்க்குணமிக்க மே தின வாழ்த்தினை தெரிவிக்கின்றது.

தொழிலாளர்களின் மீதான முதலாளித்துவத்தின் நெருக்கடி தீவிரமடைந்து, சமூக சமத்துவமின்மை விரிவடைந்துள்ளதோடு, உலகம் முழுவதும் ஜனநாயக சுதந்திரங்களும், தொழிற்சங்க உரிமைகளும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. போர்ப் பொருளாதாரத்தை நோக்கிய முதலாளித்துவ நாடுகளின் தீவிரவாதம், பன்னாட்டு ஏகபோகங்களுக்கு இலாபத்தை விரிவுபடுத்துவதையும், இராணுவச் செலவினங்களின் அதிகரிப்புகள், உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதையும் காணமுடிகின்றது.

முதலாளித்துவத்தின் போர் நடவடிக்கைகளை காரணமாக வறுமை, அழிவு, அகதிகளாகும் அவலம் ஆகியவை உருவாக்கப்படுகின்றன. மக்களுக்கும் தொழிலாளருக்கும் போதுமான கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு, கண்ணியமான வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை **WFTU** கோருகின்றது.

அமைப்பு ரீதியான ஒன்றுபட்ட போராட்டம் மட்டுமே, துயரம், சுரண்டல் மற்றும் சமூக அநீதியின் தற்போதைய தாக்குதல்களை மாற்றக்கூடிய ஒரே பாதை என்பதும், ஒற்றுமை மற்றும் சர்வதேசியமே தொழிலாளர்களின் ஆயுதம் என்பதையும் தொழிற்சங்கங்கள் உணர்ந்துள்ளன.

தொழிலாளர்களின் உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, இலவச சுகாதாரம் மற்றும் கல்வி, கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றுக்கான போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் தொடந்து போராட சர்வதேச வர்க்கம் சார்ந்த தொழிற்சங்க இயக்கமாகிய **WFTU** இன்றைய மே தினத்தில் அறைகூவல் விடுத்துள்ளது. தோழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தன்னுடைய புரட்சிகர உழைப்பாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின்
ஒப்பற்ற தலைவர்
தோழர் தாரகேஷ்வர் சக்கரபர்த்தி
அவர்களின் 22ம் ஆண்டு
நினைவு நாள்

02-05-2025

வங்கி ஊழியர்களின்
வாழ்வினை வடிவமைத்த
தோழர் தாரக் அவர்களின்
வழியொற்றி

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை
மென்மேலும் வலிமையாக்க
சபதமேற்போம் !



AIBEA

ALL INDIA
BANK STRIKE
ON
20-05-2025

நாடு தழுவிய வங்கி
ஊழியர் வேலை
நிறுத்தத்தினை

மாபெரும் வெற்றி
பெறச் செய்வோம்